
# DIOCESAN NEWS LETTER
## VELLORE

Vol. 21 JANUARY - 2025 No. 1

**St. John Bosco**
**Pray for Us**



*Wish you all...*
*Happy Feast...*



# Diocesan News Letter
## Vellore

(FOR PRIVATE CIRCULATION ONLY)

**Vol. 21 JANUARY- 2025 No. 01**


**Pilgrims of Hope : A New Year of Faith, Gratitude and the Word**

**Dear Brothers and Sisters in Christ,**

As we step into this new year of 2025, I extend to each of you my warmest wishes and blessings. The Lord grants us the grace of new beginnings an opportunity to renew our hearts, reconcile relationships, and set our sights once again on the horizon of God's unfailing love. May this year's journey draw us closer to Christ, who is our life and our hope.

**Pilgrims of Hope: Journeying Toward Jubilee 2025**

The Universal Church invites us to prepare for the Ordinary Jubilee of 2025 under the theme "Pilgrims of Hope." We are reminded that our ultimate journey is toward God's Kingdom, and along this path, we walk hand in hand with our brothers and sisters, sharing one another's burdens and joys. As "pilgrims of hope," we are called to look beyond our daily struggles and place our trust in the Lord, who accompanies us every step of the way. Let us open our hearts to

receive and share Christ's hope—especially with those who find it difficult to see light in the midst of darkness.

**Celebrating Pongal : A Harvest of Gratitude**

January is marked by the joyful celebration of Pongal, a harvest festival that reminds us of the blessings God bestows on our land, our labour, and our communities. May we offer gratitude for the fruits of the earth and the work of our hands and let us also be mindful of those **Farmers** who labour tirelessly yet struggle to make ends meet. As we celebrate, let our thanks extend to works of charity and generosity, making tangible the love that Christ calls us to share.

**Sunday of the Word of God: Embracing the Living Word**

Pope Francis, through his letter 'motu proprio' *Aperuit illis*, designated the Third Sunday in Ordinary Time as the Sunday of the Word of God. This special day invites us to rekindle our devotion to Sacred Scripture—the living Word that nourishes our faith. Amidst our many responsibilities and distractions, we can sometimes neglect God's Word. I encourage you, dear Rev. Fathers, Rev. Sisters, Rev. Brothers and my dear Faithful, to open the Bible daily, read it prayerfully, and allow the Holy Spirit to enlighten your hearts. By drawing near to Christ in Scripture, we become more deeply rooted in hope and ready to share the Good News with others.

**A Pastoral Exhortation**

(a) Renew Your Intentions: Use the momentum of the new year to renew your spiritual and personal goals. Strengthen your prayer life, prepare for the Holy Eucharist faithfully, and engage in acts of service. Let your resolutions be grounded in faith.

(b) Walk in Solidarity: Remember that you are never alone in this pilgrimage. The Local Church, our Diocese is our family, and the parish is our spiritual home. Open your hands and hearts to those who need a listening ear, a helping hand, or a message of encouragement.

(c) Cherish the Word: Embrace the Sunday of the Word of God with deep devotion. Let each home become a “school of the Gospel,” where children, youth, and adults together learn to follow Jesus more closely by meditating on His words.

(d) Cultivate Gratitude: As we celebrate Pongal and witness the fruits of our land, cultivate a spirit of gratitude for all that God provides. Through small deeds of compassion, share your blessings so that others may also rejoice in God’s goodness.

May this month of January—and this coming year—fill you with the presence and peace of Christ. United by the bond of love, let us go forward with hope in our hearts, confident that God, who began a good work in us, will bring it to fulfilment.

Prayerful wishes for a blessed New Year 2025, a fruitful Pongal celebration, and a deeper love for the Word of God.

With mercy and hope,

**+ Ambrose Pitchaimuthu**
Bishop of Vellore

**BISHOP’S PROGRAM**

| | | |
|---|---|---|
| 02 | Thu | Church Consecration, Thiruporur |
| 03 | Fri | Feast Mass, Vettavalam |
| 09 | Thu | Infant Jesus Feast Mass, Bagayam |
| 10 | Fri | St. Mary’s School, Chingleput |
| 11 | Sat | Confirmation Mass at Pallikarunai |
| 12 | Sun | Holy Mass, Cheiyur |
| 14 | Tue | Infant Jesus Shrine Feast, Thenimalai |
| 16 | Thu | Holy Mass, Kasthambadi |
| 17 | Fri | Feast Mass, Koviloor |
| 19 | Sun | First Holy Communion, Katpadi |
| 21-22 | | TNBC Meeting, Madurai |
| 27-05 | Feb | CCBI Meeting, Bhubaneswar |

## VICAR GENERAL OFFICE

**Annual Retreat**

Dear Fathers,

On behalf of our Bishop I am writing this to you. As we know that our annual retreat for the year 2024 is scheduled from February 16 th Sunday, evening to 21st Friday, till afternoon 2025, at Our Lady of Vellankanni. All are expected to attend the annual retreat without fail. In case of being unable to attend the retreat for any valid reasons, kindly inform our Bishop and get prior permission from him. You are expected to bring cassock, bible and mass diary both personal and parish and also toiletry kit.

## Monthly Recollection

Dear Fathers,

As Bishop announced already the monthly recollection for the month of January will take place in each vicariate respectively. Kindly inform the date and venue to our Bishop. Bishop will be visiting the priests at the vicariate levels only in the month of March not in the month of January. This I bring it to your kindself on behalf of our Bishop.

God bless,
Yours in Christ Jesus,

**Very Rev. Msgr. I. John Robert,**
Diocesan Administrator

**கத்தோலிக்க மேய்ப்புப்பணி நிலையம்**

**ஜனவரி மாத திருமண தயாரிப்பு வகுப்புகள்**

**04.01.2025 - மாதத்தின் முதல் சனிக்கிழமை**
இடம் - திருவண்ணாமலை உலக மாதா ஆலயம்
நேரம் - காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெறும்.

**18.01.2025 - மாதத்தின் மூன்றாம் சனிக்கிழமை**
இடம் - வேலூர் ஆயர் இல்லம்
நேரம் - காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணிவரை நடைபெறும்.

இறைபணியில் அன்புடன்
அருட்பணி **N.T.இருதயராஜ்**
இயக்குநர், மேய்ப்புப்பணி நிலையம். வேலூர்

## PROCURATOR'S OFFICE

**Mission Sunday Collection - 2024**

| S.No | Parish | Amount |
|---|---|---|
| 1 | Thirumalpadi | 4500 |
| 2 | Christianpet | 31000 |
| 3 | Santhavasal | 14060 |
| 4 | Perumanam | 4400 |
| 5 | Nallur | 4100 |
| 6 | Kasthambadi | 20450 |
| 7 | Chengam | 26320 |
| 8 | Pavitram | 66000 |
| 9 | A.Kattupadi | 39880 |
| 10 | Sipcot | 35000 |
| 11 | Gengapattu | 31780 |
| 12 | Viruduvilanginan | 25000 |
| 13 | Kodayanchi | 7940 |
| 14 | Madurampattu | 6000 |
| 15 | Narasingapuram | 5980 |
| 16 | Uriurkuppam | 10000 |
| 17 | Pathiavaram | 15130 |
| 18 | Pallikonda | 6000 |
| 19 | Alapakkam | 60237 |
| 20 | Gandhinagar | 75000 |
| 21 | Arakonam | 106000 |
| 22 | Salai | 6100 |
| 23 | Katpadi | 25000 |
| 24 | Jawadhi Hills | 6000 |
| 25 | Mosavadi | 4000 |
| 26 | Perunduraipattu | 10000 |
| 27 | Sirungattur | 3500 |
| 28 | Zamingudalore | 40000 |
| 29 | Udayendiram | 35000 |
| 30 | Cheyyar | 18000 |

| | | |
|---|---|---|
| 31 | Sanipoondi | 8200 |
| 32 | Vaniyambadi | 14700 |
| 33 | Ranipet | 30000 |
| 34 | Theresapuram | 102700 |
| 35 | Koratampet | 10000 |
| 36 | Kaniyambadi | 30000 |
| 37 | Vandavasi | 51700 |
| 38 | Koviloor | 40000 |
| 39 | Kilnathur | 5000 |
| 40 | Kezhpennathur | 4000 |
| 41 | Thiruvannamalai | 90000 |
| 42 | Shenbakkam | 10000 |
| 43 | Thirupattur | 15000 |
| 44 | Cathedral | 62900 |
| 45 | Thalayampallam | 35259 |
| | **Total** | **1251836** |

| S.No | Religious | Amount |
|---|---|---|
| 1 | St.Thomas Hospital - Chetpet | 6000 |
| 2 | St.Anne’s Convent - Christianpet | 3000 |
| 3 | SD Convent - Sennathur | 1000 |
| 4 | Cluny Convent - Katpadi | 10000 |
| 5 | DM Convent - Koottar | 1000 |
| | **Total** | **21000** |

Thanks for your generous contribution for Mission Sunday Collection. Those who have not yet sent Mission Sunday Collection, Kindly send to us as early as possible.

**Very Rev. Fr. A.Kulandesu**
Procurator

**Mr. S.Justin**
Staff Accountant

## VELLORE SOCIAL SERVICE SOCIETY

09.12.2024-ஆம் தேதி வேலூர் மறைமாவட்ட புதிய ஆயராக நியமனம் செய்யப்பட்ட மேதகு ஆயர் முனைவர் அம்புரோஸ் பிச்சைமுத்து அவர்களின் அருட்பொழிவின் நிகழ்விற்காக வேலூர் சமூக சேவை சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு மக்கள் தொடர்பு பணிகள் ஆகும். டிசம்பர் மாதம் 1-ம் தேதியிலிருந்து தொடங்கப்பட்டு பல்வேறு அரசு, தனியார், காவல்துறை ஆகியவர்களை சந்தித்து விழா நடத்துவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. சுப்புலட்சுமி, வேலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. P.கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் வணக்கத்திற்குரிய திருமதி. சுஜாதா ஆனந்தகுமார், காவல்துறை துணை போலீஸ் சூப்பிரண்டு திரு. இருதயராஜ் ஆகியோரின் ஒத்துழைப்பால் விழா நடத்துவதற்கான அனுமதியும், காவல்துறை பாதுகாப்பும், தூய்மை பணியும், தற்காலிக கழிப்பிடமும், தீயணைப்புத்துறை வாகனமும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

ஆயர் இல்லத்திலிருந்து விழா இடத்திற்கு ஆயர்கள், குருக்கள் ஊர்வலமாக செல்ல மாலை 04.45 முதல் 05.00 மணிவரை அரசு முஸ்லீம் பள்ளி சாலையிலிருந்து லஷ்மி திரையரங்குவரை அண்ணாசாலை பிரதான சாலையில் எந்த வாகனமும் செல்லாமல் (Road Block) பாதுகாப்பு அளித்தார்கள். ஆர்.சி. சர்ச் ரோடு ரவுண்டானா புதிய தார் சாலை ஆயரின் வருகைக்காக அமைக்கப்பட்டது. மக்கள் தொடர்பு பணியின் இயக்குநர் பேரருட்திரு. S.ஜேம்ஸ் MSW அவர்கள் தலைமையில், திட்ட மேலாளர் திரு. A.பேட்ரிக் அவர்கள் வழிகாட்டுதலுடன் VSSS & TVMSSS Codep என 50 பணியாளர்கள் விழா நாளன்று கண்காணிப்பு பணியை சிறப்புடன் செய்தார்கள். விழாவிற்கு ஒத்துழைப்பு நல்கிய அரசுத்துறை, மாநகராட்சி, காவல்துறை, தீயணைப்புத் துறை மற்றும் வாகனம் நிறுத்த கண்ணா ஓட்டல் பார்க்கிங் இடத்தை தந்த நிறுவனர் ஆகிய அனைவருக்கும் VSSS சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

10.12.2024 & 11.12.2024 இரண்டு நாட்கள் மகாபலிபுரத்தில் தேசிய அளவில் கோல்பிங் கூட்டம் நடைபெற்றது. இதில் கோல்பிங்

இயக்குநர் தந்தை பேரருட்திரு. S.ஜேம்ஸ், MSW அவர்களும் ஒருங்கினைப்பாளர் திரு. K.ஏசுகுமார் கலந்துக் கொண்டனர். இந்த கூட்டத்தில் வேலூர் கோல்பிங் உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் செயல் திட்டங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. தேசிய அளவில் வேலூர் கோல்பிங் சிறப்பாக செயல்படுவதாக தேசிய கோல்பிங் இயக்குநர் தந்தை பேரருட்திரு மரிய சூசை அவர்கள் பாரட்டினார். தேசிய அளவில் வேலூர் கோல்பிங் செயல்திட்டங்களை PPT வடிவில் விளக்கம் அளிக்கப்பட்டது.

30-11.2024 முதல் 03-12-2024-ஆம் தேதி வரை இயக்குநர் தந்தை பேரருட்திரு. S.ஜேம்ஸ், MSW அவர்கள் சாத்தனூர் அணை பென்ஜால் புயல் காரணமாக திறக்கப்பட்டதால் திருவண்ணாமலை பகுதியில் பல இடங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்தார். குறிப்பாக தண்டராம்பட்டு, பெருந்துறைப்பட்டு அதனைச் சார்ந்த கிளைபங்குகள் ஆகியவற்றில் பாதிக்கப்பட்ட மக்களை நேரிடையாக சந்தித்து ஆறுதல் கூறி உடனடியாக அரிசி மற்றும் நிவாரண உணவுப்பொருட்கள் வழங்கினார். தொடர் நடவடிக்கையாக காரிதாஸ் இந்தியாவிற்கு நிவாரணம் வழங்க திட்ட வரைவு தயார் செய்யப்பட்டு அனுப்பப்பட்டது.

18-12.2024-ஆம் தேதி புதன்கிழமை குருக்களுக்கு நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவின்போது மறைமாவட்டத்திலுள்ள அனைத்து பங்குகளின் இறைமக்களுக்கு ரூ. 6,00,000/- மதிப்புள்ள சேலைகள், லுங்கிகள், பெட்ஷீட்கள் கிறிஸ்துமஸ் பரிசாக VSSS & TVMSSS இயக்குநர் பேரருட்திரு. S.ஜேம்ஸ், MSW அவர்களால் வழங்கப்பட்டது.

19-12.2024-ஆம் தேதி வியாழக்கிழமை பென்ஜால் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு காரிதாஸ் இந்தியா தொண்டு நிறுவனத்தின் மூலம் பெறப்பட்ட நிவாரண நிதியை தண்டராம்பட்டு, பெருந்துறைப்பட்டு ஆகிய பகுதியில் பாதிக்கப்பட்ட 165 குடும்பங்களுக்கும், பிற பகுதிகளில் பாதிக்கப்பட்ட 45 நபர்களுக்கும் அரிசி, மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்புப் பைகள் மறைமாவட்ட ஆயர் மேதகு முனைவர் அம்புரோஸ் பிச்சைமுத்து அவர்கள், Monsignor I. ஜான் ராபர்ட் முன்னிலையில், VSSS & TVMSSS இயக்குநர் பேரருட்திரு.

S.ஜேம்ஸ் MSW அவர்கள், தண்டராம்பட்டு பங்குதந்தை பாக்கியராஜ், பெருந்துறைப்பட்டு பங்குதந்தை A.ஜெயசீலன், VSSS திட்ட மேலாளர் திரு. A.பேட்ரிக் ஆகியவர்கள் உடனிருக்க மாலை 05.30 மணி அளவில் தண்டராம்பட்டு பங்கில் நிவாரணம் அளித்தார்கள். புதியதாக பொறுப்பேற்ற ஆயர் அவர்கள் நேரிடையாக மக்களை சந்தித்து நிவாரணம் வழங்கியது பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

**கிறிஸ்துமஸ் சிறப்பு நிகழ்ச்சி**

22.12.2024: வேலூர் மறைமாவட்ட சமூக சேவை சங்கங்களின் சார்பாக 22.12.2024-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி அளவில் ஆயர் இல்ல ஜூபிலி அரங்கில் கிறிஸ்து பிறப்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இப்பெருவிழாவிற்கு வேலூர் மறைமாவட்டத்தின் ஏழாவது ஆயர் மேதகு முனைவர் அம்புரோஸ் பிச்சைமுத்து அவர்கள் தலைமை தாங்கினார்கள். ஆயர் இல்லத்திலிருந்து அரங்கு வரைக்கும் பவனியாக அழைத்து வரப்பட்டார். விழாவின் நிகழ்வில் பேரருட்திரு. S.ஜேம்ஸ், MSW இயக்குநர் அவர்கள் வரவேற்பும் வாழ்த்து செய்தியும் அளித்தார்கள். தமது உரையில் வேலூர் திரு அவையின் தலைமகன், ஆயர் மற்றும் சமூக சங்கங்களின் தலைவர் மேதகு முனைவர் அம்புரோஸ் பிச்சைமுத்து அவர்களை வரவேற்று பூங்கொத்து கொடுத்து, சீர்வரிசையாக பல புத்தகங்கள் கொடுத்து தல கிறிஸ்துமஸ் காணும் ஆயரை வரவேற்றார். தமது வாழ்த்து உரையில் இரக்கமும், எதிர்நோக்கும் கொண்ட தலைமகன் ஆயர் அம்புரோஸ் பிச்சைமுத்து அவர்களின் உற்றுநோக்கும் பார்வையும், பேரன்பும், சாந்தமும், தயவு உள்ளமும் கொண்ட நம் ஆயர் நம்பிக்கையின் நங்கூரமாகவும், எதிர்நோக்கின் கலங்கரை விளக்காகவும் திகழ்வது நாம் பெற்ற பேறும், நம் மறைமாவட்டத்திற்கு கிடைத்த பொக்கிஷமும் என்று வாழ்த்தி வரவேற்றார். மேலும் சங்கங்களின் நிர்வாகக் குழு குருக்கள் பேரருட்திரு. குழந்தேசு, கிளமெண்ட் ரொசாரியோ, முனைவர் ரமேஷ் மற்றும் ரிச்சர்ட் பெரைரா மறைபணி நிலைய இயக்குநர் அருட்திரு. N.T.இருதயராஜ், ஆயர் செயலர் அருட்திரு. ஜீவகன்,

ஓல்டுடவுன் ஆரோக்கியமாதா பங்கு குரு அருட்திரு. யேசுபிரபு ஆகியோர்களுக்கும் புத்தகங்கள் வழங்கி வரவேற்றார்.

கிராமபுற சூழலில் பல வளங்கள் குறைவாக இருந்தாலும் வளங்களில் முக்கியமான வளமாகிய மனிதவளம் கல்வியில் சிறந்தோங்கும் MBBS மருத்துவர்கள், செவிலியர்கள் பயிலும் மாணவர்கள் நம் மறைமாவட்டத்தின் VSSS வழியாக கல்வி உதவி தொகை பெற்று மனித வளமாக உள்ளார்கள் என்றும் இதற்காக நம் மறைமாவட்ட குருக்கள் அயல் நாடுகளுக்கு சென்று தனிப்பட்ட நிலையில் உபகாரிகளை சந்தித்து நிதி உதவி பெற்று கல்வி பணி செய்வதில் முதன்மையாக சிறந்து விளக்குபவர் அருட்திரு. அமலநாதன், மற்றும் அருட்தந்தையர்கள் மத்தியாஸ், சகாயநாதன், ரமேஷ், பால் ஆரோக்கியம், பிரகாஷ், TVMSSS வழியாக அருட்தந்தையர்கள் ஞானஜோதி, ஜெயபாலன், மார்ட்டின் சாந்தகுமார், கிறிஸ்துராஜ் ஆகியோரின் கல்வி உதவி நிதி திட்டத்தைப்பற்றி குறிப்பிட்டு எடுத்துரைத்து அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள். இதனால் மாணவ மாணவியர்களின் முன்னேற்றம் மனித வளமாக நம் மறைமாவட்டத்திற்கு சான்றாக உள்ளது என வலியுறுத்தினார்கள். இயேசு பாலகன் பிறந்த நாளில் மையமாக பங்கேற்ற குழந்தைகளுக்கு மத்தியில் ஆயர் அவர்கள் கேக் வெட்டி அவர்களுக்கு கேக் ஊட்டி மகிழ்வித்தார்கள்.

ஆயர் அவர்களின் ஆசியுரையில் சங்கங்களின் பணிகளில் மனித வளம் வலிமையாக உள்ளது என்றும் இதற்காக அல்லும் பகலும் உழைத்து வருகின்ற சங்கங்களின் இயக்குநர் பேரருட்திரு. S.ஜேம்ஸ், MSW அவர்களை வாழ்த்தி, பாராட்டி சிறப்பு செய்தார்கள். அவர் தமது தலைமை உரையில் சங்கங்களின் வழியாக திட்ட உதவிகள் பெற்றவர்கள் மீண்டுமாக சமூக முன்னேற்றத்திற்கு தங்களின் பங்களிப்பை தரவேண்டும் என்றும், பெறுவதைவிட கொடுப்பதில்தான் கிறிஸ்துமஸ் பொருள் உள்ளது என்றும் சமூக அக்கறையில் மாற்று சிந்தனை உருவாக்க வேண்டும் என்றும் பயன்பெறுவோம், பயன் தருவோம் என்ற கருத்தியலில் கிறிஸ்து பிறப்பின் செயல்வடிவம் அன்பு, கருணை, கரிசனையில் சாதாரண மனிதராக பிறந்தார் என்றும், கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட நாம் கடவுளின்

முகமாகவும் அதையும் தாண்டி அன்போடு, அக்கறையோடு, கரிசனையோடு பணிகளை செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தினார்கள்.

மேனாள் பரிபாலகர் பேரருட்தந்தை I.ஜான்ராபர்ட் அவர்கள் சமூக சேவை சங்கங்களின் மாபெரும் முன்னேற்றப் பணிகளுக்கு அயராமல் உழைத்து வருகின்ற இயக்குநர் பேரருட்திரு. S.ஜேம்ஸ், MSW அவர்களை வாழ்த்தி பாராட்டி கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார்கள்.

திரு. பேட்ரிக் VSSS திட்ட மேலாளர் அவர்கள் வேலூர் மறைமாவட்ட வளர்ச்சிக்கும் சமூக நல சங்கங்களின் பணி முன்னேற்றத்திற்கும் உழைத்த மேனாள் ஆயர் பெருமக்களின் தியாகத்தையும், செயல்பாடுகளையும், பங்களிப்பையும் விவரித்து அவர்களின் அளப்பறியா சேவைகளுக்காக நன்றி தெரிவித்தார். மாலைநேர பள்ளி மாணவியர்களின் நடன நிகழ்ச்சிகள் நடைப்பெற்றது.

கறவைமாடு திட்ட நிதிகள், வீடு கட்டும் திட்ட நிதிகள், கழிப்பறை கட்ட நிதிகள், குடும்ப பொருளாதார முன்னேற்ற திட்ட நிதிகள் என 150 கோல்பிங், மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ. 35,00,000/- நிதியும், கைம்பெண்களுக்கு தையல் இயந்திரமும், நம் மனித நேய ஆயர் அவர்களின் கரங்களால் வழங்கப்பட்டது. இறுதியாக திரு. இன்பசேகர் TVMSSS திட்ட அலுவலர் நன்றி கூறினார். அனைத்து நிகழ்ச்சிகளையும், செல்வி. பிரேமா ஆசிரியை தொகுத்து வழங்கினார்கள்.

VSSS & TVMSSS பணியாளர்களின் பணியை பாராட்டி இயக்குநர் அவர்கள் அனைவருக்கும் பொன்னாடை போர்த்தி சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்வில் கோல்பிங் உறுப்பினர்கள், மகளிர் சங்க உறுப்பினர்கள், மாலை நேர வகுப்பு ஆசிரியர்கள், மாணவர்கள், மருத்துவ படிப்பு மாணவர்கள் என 400 பேர் கலந்துக்கொண்டனர், அனைவருக்கும் தேநீர், மதிய உணவு பிரியாணி வழங்கப்பட்டது.

23.12.2024 : அன்று வேலூர் சமூக சேவை சங்கத்தின் வழியாக சேவூர் தொழுநோயாளர் சங்கத்தின் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி VSSS & TVMSSS இயக்குநர் பேரருட்திரு. S.ஜேம்ஸ் MSW அவர்கள் தலைமையில் கிறிஸ்துமஸ் சிறப்பு செய்தியும், திரு. பேட்ரிக் VSSS திட்ட மேலாளர் அவர்கள் வாழ்த்து செய்தியும் வழங்கி, உணவுப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு, கேக் ஆகியவை வழங்கப்பட்டது.

செய்தி தொகுப்பு
திரு. **A.**பேட்ரிக் &
திரு. **T.**இன்பசேகர்
**VSSS & TVMSSS** திட்டமேலாளர்கள்

பேரருட்திரு. **S.**ஜேம்ஸ், **MSW**
இயக்குநர், **VSSS & TVMSSS**
ஆயர் இல்லம், வேலூர்

## BIRTHDAY

| | | |
|---|---|---|
| 1 | Fr. S.Clement Rosario | 05-01-1966 |
| 2 | Fr. M.John Nicholas | 09-01-1959 |
| 3 | Fr. F.Felix Kamal | 11-01-1986 |
| 4 | Fr. S.Jacob | 12-01-1976 |
| 5 | Fr. K.Arockia Raj | 14-01-1979 |
| 6 | Fr. R.Anthony Samy | 26-01-1952 |
| 7 | Fr. A.R.Anthony Samy | 27-01-1970 |
| 8 | Fr. B.Antony Suresh | 30-01-1984 |

## ORDINATION DAY

| | | |
|---|---|---|
| 1 | Fr. S.Irudayaraj | 10-01-2003 |

## NECROLOGY

| | | |
|---|---|---|
| 1 | Rev. Fr. Venantius Villanova SDB | 03.01.1988 |
| 2 | Rev. Fr. Joseph Sandanam SDB | 05.01.1987 |
| 3 | Rev. Fr. K.M Sebastian | 07.01.2011 |

| | | |
|---|---|---|
| 4 | Rev. Fr. Theo M. Andreas SDB | 08.01.1968 |
| 5 | Rev. Fr. I.Gnana Manickam | 11.01.1985 |
| 6 | Rev. Fr. K.S. George | 13.01.2000 |
| 7 | Rev. Fr. Eligius Cinato SDB | 15.01.1964 |
| 8 | Rev. Fr. A. Thomas | 17.01.1989 |
| 9 | Rev. Fr. Joseph Jeswanthraj SDB | 24.01.2007 |
| 10 | Rev. Fr. A. Periyanayagam | 26.01.2006 |
| 11 | Rev. Fr. K. C. Mathew | 29.01.1980 |
| 12 | Rev. Fr. Consantine Vendrame SDB | 30.01.1957 |
| 13 | Rev. Fr. Bagavantharaj SDB | 31.01.1995 |

## HOLY FATHER'S INTENTION :

For the right to an education Let us pray for migrants, refugees and those affected by war, that their right to an education, which is necessary to build a better world, might always be respected.

## CALENDER

| | | |
|---|---|---|
| 04 | Sat | St. Elizabeth Ann Seton, RI, Mem |
| 05 | Sun | Epiphany of the Lord, Sol. |
| 06 | Mon | St. Andre Bessette, RI. |
| 07 | Tue | St. Raymond of Penyafort, P. |
| 12 | Sun | Baptism of Our Lord, Feast |
| 13 | Mon | St. Hilary, Bp, Dr. |
| 14 | Tue | St. Devasahayam, M. |
| 17 | Fri | St. Antony, Abb, Mem |
| 19 | Sun | 2nd Ordinary Sunday |
| 20 | Mon | St. Fabian PP., and St. Sebastian, Mm |
| 21 | Tue | St. Agnes, Vir., M., Mem |
| 22 | Wed | St. Vincent Dn., M., |

| | | |
|---|---|---|
| 24 | Fri | St. Francis de Sales, Bp., Dr., Rf. Mem |
| 25 | Sat | Conversion of St. Paul, Ap., Feast |
| 26 | Sun | 3 rd Ordinary Sunday |
| 27 | Mon | St. Angela Merici, Vir., Rel. |
| 28 | Tue | St. Thomas Aquinas Pi., Dr., Mem |
| 31 | Fri | St. John Bosco Pr., Rf., Mem |

## RIP

In your Charity kindly pray for Rev. Sr. Baby Kamalam, SSHL (51) from Sacred Heart Generalate passed away on 07. 12. 2024. May her soul rest in peace.

In your Charity kindly pray for Mr. Arputham (62) beloved elder brother of Rev. Fr. Sigamani (Rome) from (Punitha Arockia Annai Church - Substation) Uriyoorkuppam Parish passed away on 11.12.2024. May his soul rest in peace.

In your Charity kindly pray for Mrs. Shanthi (83) beloved Mather of Rev. Fr. Charles Yesudas (Parish Priest of Elayankanni) from Our Lady of Fatima Shrine, Krisnagiri passed away on 14.12.2024. May her soul rest in peace.

In your Charity kindly pray for beloved Msgr. Nambikairaj (89), Diocesan Spiritual Director passed away on 23.12.2024. May his soul rest in peace.



## Monsignor A.நம்பிக்கைராஜ்

மதுரை உயர் மறைமாவட்டம், பூந்தோட்டம் என்னும் பங்கைச் சார்ந்த தந்தை திரு. அந்தோணி, தாய் திருமதி. அன்னம்மாள் இவர்களின் மூன்றாவது மகனாக Monsignor A.நம்பிக்கைராஜ் அவர்கள் 1935-ம் ஆண்டு மே மாதம் 26-ஆம் தேதி மலையப்பன்பட்டி ஊரில் பிறந்தார். உடன்பிறந்தோர் 1 மூத்த சகோதரர், 1 மூத்த சகோதரி, 1 இளைய சகோதரி ஆவர்.

| | |
|---|---|
| 1941 - 1947 | மதுரை St. Mary's ஆரம்பப்பள்ளியில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை படித்தார். |
| 1947 - 1954 | மதுரை St. Mary's உயர்நிலை பள்ளியில் 6 முதல் S.S.L.C. வரை படித்தார். |
| 1955 - 1958 | சென்னை சாந்தோம் இளங்குரு மடத்தில் பயின்றார். |
| 1958 - 1961 | பூந்தமல்லி திரு இருதய குருத்துவ கல்லூரியில் மெய்யியல் பயின்றார். |
| 1961 - 1965 | பூந்தமல்லி திரு இருதய குருத்துவ கல்லூரியில் இறையியல் பயின்றார். |

| | |
|---|---|
| 15.08.1964 | பூந்தமல்லி திரு இருதய குருத்துவ கல்லூரியில் Most Rev. Francis Canvalho ஆயர் அவர்களால் திருத்தொண்டராக அருட்பொழிவு பெற்றார். |
| 09.04.1965 | "என் இறைவா உம்மீது நான் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளேன் (I have trusted in you O Lord)..." என்ற குருத்துவ விருதுவாக்கில், பூந்தமல்லி திரு இருதய குருத்துவ கல்லூரியில் Most Rev. David Mariyanayagam, SDB, ஆயர் அவர்களால் குருவாக அருட்பொழிவு பெற்றார். |
| 1965-1968 | தச்சாம்பாடி பங்கில் உதவி பங்கு தந்தையாக பணியாற்றினார். |
| 1968 - 1969 | பூந்தமல்லி தூய பீட்டர் மறைப்பணி மையத்தில் Pastoral Course பயின்றார். |
| 1969 - 1970 | தச்சாம்பாடி பங்கில் பங்கு தந்தையாக பணியாற்றினார். |
| 1970 - 1977 | விருதுவிளங்கினான் பங்கில் முதல் பங்கு தந்தையாக பணியாற்றினார். |
| 1974 - 2004 | Diocesan Councilor -ஆக பணியாற்றினார். |
| 1977 - 1979 | பள்ளிகொண்டா பங்கில் பங்கு தந்தையாக பணியாற்றினார். |
| 1979 - 1988 | வேலூர் மேற்றாசின விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் பங்கு தந்தையாக பணியாற்றினார். |
| 1988 - 1990 | வேலூர் ஆயர் இல்லத்தில் மறைமாவட்ட பொருளாளராக பணியாற்றினார். |
| 1982 - 1997 | வேலூர் ஆயர் இல்லத்தில் மறைமாவட்ட முதன்மை குருவாகவும், பரிபாலகராகவும் மிக சிறப்பாக பணியாற்றினார். |
| 1997 - 2004 | Chancellor-ஆக பணியாற்றினார். |
| 2000 - 2001 | ஓய்வு விடுமுறை (Sabatical Leave) பெற்று திருவண்ணாமலை Grace & Compassion Convent-ல் Chaplin-ஆக பணியாற்றினார். |

| | |
|---|---|
| 2004 | வேலூர் ஆயர் இல்லத்தில் ஆன்ம குருவாக பணியாற்றினார். |
| 2010 - 2024 | Retired Confessor 75 வயதில் ஓய்வு பெற்று ஆன்மீக குருவாக தொடர்ந்தார். |

## Monsignor A.நம்பிக்கைராஜ் அவர்கள் ஆற்றிய சிறப்பான பணிகள்

1) தச்சாம்பாடி பங்கில்

- கிளை பங்கான கொலக்கரவாடியில் சிற்றாலயம் கட்டினார்.

2) விருதுவிளங்கினான் பங்கில்

- குருக்கள் இல்லம், கன்னியர் இல்லம் கட்டினார்.
- பங்கு ஆலயம் கட்டினார்.
- காட்டுக்கோயிலில் கோடி அற்புதம் புரியும் புனித அந்தோணியார் சுரூபம் நிறுவினார்.
- கிளைபங்கான பொரிக்கல்◌ல் சிற்றாலயம் கட்டினார்.

3) பள்ளிகொண்டா பங்கில்

- கிளை பங்குகளான அகரம்சேரி, ஒதியத்தூர் ஆகிய இடங்களில் சிற்றாலயம் கட்டினார்.
- வெங்கிளியில் சிற்றாலயத்தை புதுப்பித்தார்.

4) வேலூர் விண்ணேற்பு அன்னை பங்கில்

- பள்ளி கட்டிடமும், தட்டச்சு மையமும் கட்டினார்.
- பாகாயம் பங்கில் ஆலயமும் பள்ளி கட்டிடமும் கட்டினார்.
- பழைய விண்ணேற்பு அன்னை பேராலயத்தை விரிவுப்படுத்தி மேல்தளம் அமைத்தார்.

Monsignor A.நம்பிக்கைராஜ் அவர்கள் வேலூர் மறைமாவட்டத்திற்காக தன்னை அர்ப்பணித்து இறைவனுக்கும் அவர்தம் மக்களுக்கும், மறைமாவட்ட ஆயர்களுக்கும், குருக்களுக்கும் நம்பிக்கைக்குரியவராய் சிறப்பாக பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. வார்த்தைகளை இதமாகவும், மென்மையாகவும் இறைமக்களிடம் பேசி, பழகி இறைவனின் நற்செய்தியை

போதித்தார். வேலூர் மறைமாவட்ட அனைத்து தகவல்களையும் கணினிப்போல Finger Tips-ல் பதிலளிப்பார்.

அமைதியின் தூதராகவும், எளிமையின் சிகரமாகவும், செப வாழ்வில் பக்தியோடும் சிறந்தவராய் அனைவரையும் ஆண்டவரில் ஆற்றுப்படுத்துபவராய் 59 ஆண்டுகள் மிக சிறப்பாக பணியாற்றி தனது 89-வது அகவையில் 23.12.2024 திங்கட்கிழமை மாலை 05.25 மணி அளவில் இறைவனடி சேர்ந்தார்.

"ஆண்டவர் தம் அன்பர்களின் (Monsignor A.நம்பிக்கைராஜின்) சாவு அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது" (திருப்பாடல் 116:15)

23.12.2024 அன்று நடைபெற்ற நிகழ்வு :

சேத்துப்பட்டு தூய தோமையார் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த நம் பாசத்திற்குரிய Monsignor A.நம்பிக்கைராஜ் அவர்கள் வயது மூப்பின் காரணமாக 23.12.2024 திங்கட்கிழமை மாலை 05.25 மணி அளவில் இறைவனடி சேர்ந்தார். மருத்துவமனை சிற்றாலயத்தில் சேத்துப்பட்டு மறைவட்ட முதன்மை குரு பேரருட்திரு. விக்டர் இன்பராஜ் அவர்களின் தலைமையில் கோடெப் இயக்குநர் அருட்தந்தை ரிச்சர்ட் பெரேரா, மோசவாடி பங்கு தந்தை அருட்தந்தை. ஜெயக்குமார், கெங்காபுரம் பங்குதந்தை செல்வம், ராந்தம்-கொரட்டூர் குருக்கள் மற்றும் அருட்தந்தை. அலெக்ஸாண்டர் ஆகியோர் தந்தைக்கு இரங்கல் திருப்பலி நிறைவேற்றினார்கள்.

இத்திருப்பலியில் அருட்சகோதரிகள் மரியா, லிண்டா, சேத்துப்பட்டு வட்டார சி.ஆர்.ஐ. அருட்சகோதரிகள் கலந்துக்கொண்டார்கள். திருப்பலி முடிந்தவுடன் ஆம்புலன்ஸ் மூலமாக தந்தையின் உடலை வேலூர் சி.எம்.சி மருத்துவமனைக்கு கொண்டுவந்து வேலூர் மறைமாவட்ட மேனாள் பரிபாலகர் பேரருட்திரு. I.ஜான் ராபர்ட், மறைப்பணி இயக்குநர் பேரருட்திரு.

**N.T.**இருதயராஜ், ஆயரின் செயலர் அருட்தந்தை **I.**ஜீவகன் ஆகியோர் செபவழிபாடு செய்தனர். இவ்வழிபாட்டில் ஆயர் இல்ல பணியாளாகள் திருவாளர்கள். ஜெஸ்டின், சவரிமுத்து, பிரான்சிஸ், St. Luke அருட்சகோதரிகள் ஆகிய அனைவரும் உடனிருந்தனர். பிறகு தந்தையின் உடலை இறந்தோர் வைப்பு அறை Mortuary-ல் வைத்தனர்.

26.12.2024 வியாழக்கிழமை அன்று நடைபெற்ற நிகழ்வு:

அதிகாலையில் VSSS இயக்குநர் அருட்தந்தை S.ஜேம்ஸ் அவர்கள் மற்றும் CMC Hospital St. Luke அருட்சகோதரிகள், ஆயர் இல்ல பணியாளர் திரு. பிரான்சிஸ் அவரது மனைவி (Nurse CMC Hospital), திரு. ஜெபர்சன் ஆகியோர் CMC Hospital சென்று தந்தையின் உடலை இறந்தோர் வைப்பு அறை (Mortuary)-லிருந்து வெளியில் கொண்டு வந்து திருப்பலிக்கு தந்தையை தயார் செய்து ஆம்புலன்ஸ் மூலமாக வேலூர் விண்ணேற்பு அன்னை பேராலயத்தில் காலை 08.30 மணிக்கு இறைமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்பு 11 மணி அளவில் மேதகு முனைவர் ஆயர் அம்புரோஸ் பிச்சைமுத்து தலைமையில் மற்றும் மறைமாவட்ட குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் மற்றும் பங்கு இறைமக்கள் Monsignor A.நம்பிக்கைராஜ் அவர்களின் இறுதிப்பயண கூட்டுத்திருப்பலியில் பங்கேற்றனர். திருப்பலி முடிந்தவுடன் மரித்த குருக்களின் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.













